முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1588

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.02.2024**, சனிக்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானப்படைகள் கொண்ட தேசிகனே
தானதர்மத்தின் மகாபலத்தை
தரணியில் நிரூபித்து அருளுகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும்
வரமென ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் தை மாதம் 20 ம் நாள், 03.02.2024, சனிக்கிழமை)
வையகத்தில் அரங்கன் புகழ் உலகறிய
3. உலகறிய சுப்ரமணியர் யானும்
உயர்வான தொண்டர்படைகளை உருவாக்கி
வேலவன் என் வழிபாட்டின் நோக்கமாக
விடாது அன்னதான சேவை துவக்கி
4. துவக்கியே உலகமெங்கும் தர்மமாக
தேசிகன் புகழை கொண்டுசெல்கின்றேன்
அவனியில் அரங்கன் நாமஜெபத்தோடு
ஆறுமுகன் யான் என் சக்தி வெளிப்பாட்டை
5. வெளிப்பாட்டை உலகுக்கு தாரக மந்திரமாக
விடாது குருவருள் தீட்சையாக
தெளிவூட்டி ஆறுமுகன் யான்
தேசிகன் கொள்கையாக உலகமெங்கும் எடுத்துச்சென்று
6. சென்றுமே இந்த பேருலகில்
சிறப்பான ஓங்கார சக்தி முழங்க
மறுப்பின்றி அனைவருக்கும் ஞானம் தந்து
மகான் அரங்கன் வழி உலகோரெல்லாம்

7. எல்லோரும் ஞானிகளாகும் வாய்ப்பை
உயர்வாக வரமாகத் தந்து
வல்லமையான ஞான ஆட்சி உலகமடைய
வழிகாட்டி அரங்கன் வழி ஆறுமுகன் யான்

8. ஆற்றலாக இருந்து அற்புதம் நிகழ்த்துகின்றேன்
அன்னதனால் அரங்கன் கொள்கை ஏற்று
அகிலத்தார் சரணாகதிகொண்டால்
அகிலமாற்றம் சடுதி நிகழும் அரங்கன் தவபலமாக இது சித்திக்கும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—